3. அறிக்கைகள் அளித்தல்

(அ) மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர்.*

திரு. பி.ஜி. நாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய மக்கள் ஏற்றம் பெற புரட்சிகரமான திட்டங்களை நிறைவேற்றி, பொற்கால ஆட்சி நடத்திவரும், தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரம், இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2012-2013 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் ஆறாவது அறிக்கையினைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

(ஆ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. ச. இராமச்சந்திரன், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.*

திரு. ச. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012-2013 ஆம் ஆண்டிற்கான பொது கணக்குக் குழுவின் 73 முதல் 90 வரையிலான 18 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையின் கடமையை நிறைவேற்ற நான் இங்கே அமர்ந்திருந்தேன். என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது. அவை முன்னவர் பக்கம்தான் அதைப் பார்த்திருக்க முடியும். இருந்தாலும் கட்சியின் கடமையை நிறைவேற்றுகின்ற வகையிலே நான் வெளிநடப்புச் செய்கின்றேன்.

(உறுப்பினர் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தார்.)

(இ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்பி. உதயகுமார், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர்.*

திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை இன்னல்கள், எத்தனை இடையூறுகள், எத்தனை எத்தனை சோதனைகள், எத்தனை எத்தனை வேதனைகள், அத்தனையும் புன்னகையோடு தான் ஏற்றுக்கொண்டு, நெருப்பாற்றிலே நீந்தி, அஞ்சாத அரிமாவாக, எந்தவித எதிர்பார்ப்புமின்றி, மக்கள் பணியில் 30 ஆண்டுகளையும், கழகப் பொதுச் செயலாளராக 25 ஆண்டுகளையும் நிறைவு செய்து, கழகத்தையும், மனித குலத்தையும் கண்ணை இமை காப்பதுபோல் காத்து வருகின்ற கருணையின் பிறப்பிடம், வாழும் மனித தெய்வம் அம்மா அவர்களின் வலிமைமிகு தலைமையை, பெருமைமிகு தலைமையை, புண்ணியமிகு தலைமையை, புனிதமிகு தலைமையை, சீர்மிகு தலைமையை, சிறப்புமிகு தலைமையை, அன்புமிகு தலைமையை, ஆற்றல்மிகு தலைமையை, கருணைமிகு தலைமையை, காவல்மிகு தலைமையை, இலட்சியமிகு தலைமையை, ஊக்கமிகு தலைமையை, வீரமிகு தலைமையை, விவேகமிகு தலைமையை, தியாகமிகு தலைமையை, தீரமிகு தலைமையை, தர்மமிகு தலைமையை, தகுதிமிகு தலைமையை, அருள்மிகு தலைமையை, அறிவுமிகு தலைமையை, வெற்றிமிகு தலைமையை, தெய்வமிகு தலைமையை ஏற்றுக்கொண்டு, வல்லரசாக வரலாறு படைத்திட தவமாய்த் தவமிருந்து வருகிறது இந்தியத் திருநாடு என்பதையும், (மேசையைத் தட்டும் ஒலி) அப்பொன்னான நாளை எதிர்நோக்கி தவமாய் தவமிருந்து காத்திருக்கின்றது அன்னைத் தமிழ்நாடு என்பதையும், (மேசையைத் தட்டும் ஒலி) வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலிலே இப்புனிதத் தவத்திற்கான வரத்தினைப் பெற்றிட காலம் கனிந்து கைகூடி வந்திருக்கின்றது என்பதையும், வைரவிழா கண்டிருக்கின்ற இந்த அவையிலே எடுத்துவைத்து, ஆயிரம் நாவு படைத்திருக்கின்ற அந்த ஆதிசேஷனாலும் பட்டியலிட முடியாத கோடானுகோடி மாண்புகளைப் பெற்றிருக்கின்ற மகா சக்தியின் வடிவம், உலகத்தை ஆளுகின்ற ஆற்றல் பெற்றிருக்கும் இந்தியத்*

திருநாட்டின் வழிகாட்டி, வாழும் மனித தெய்வம், இளைய சமுதாயத்தின் காவல் தெய்வம், அம்மா அவர்களின் புனித பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012-2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை அரசு உறுதிமொழிக் குழுவின் 40 முதல் 48 வரையிலான 9 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

நண்பகல் 12-00

(ஈ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். அரசுக் கொறடா முனைவர் வைகைச்செல்வன், மனுக்கள் குழுவின் தலைவர்.*

***முனைவர் வைகைச்செல்வன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குயிலுக்குக் கூடு கட்டத் தெரியாது. வாத்துக்கு அடைகாக்கத் தெரியாது. இங்கு வெளியேறிய அண்டங்காக்கைக்கு எதிர்காலமும் கிடையாது (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொல்லி, விடியும் வரை விண்ணை நம்பு, முடியும் வரை உன்னை நம்பு என்று நம்பிக்கை வாசல்களை நாளும் திறந்து வைத்து, தமிழ்நாட்டு மக்களுடைய விடியலுக்காக, நாளும் பொழுதும் பாராமல், அஸ்தமனம், உதயம் என்று பாராமல் இரவு, பகலாக உழைத்து வருகிற உன்னதமாகத் திகழ்கிற சத்தியத்தின் இருப்பிடமாக, சரித்திரத்தின் வரைபடமாக, சகாப்தத்தினுடைய உறைவிடமாகத் திகழ்கிற உலகத் தமிழ் இனத்தினருடைய ஒப்பற்ற தலைவர், உள்ளும் புறமும் சத்தியமாக வாழ்கிற, நீதியின் தேவதை தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைப பணிவுடனும், அடக்கத்துடனும் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012-2013 ஆம் ஆண்டுக்கான மனுக்கள் குழுவினுடைய 16, 17, மற்றும் 18 ஆகிய மூன்று அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.